# உள்ளடங்கல் கல்வியில் சிறந்து விளங்கும் இலங்கை பாடசாலை



**தரம் ஒன்றில் நெத்மி மீண்டும் சேர்க்கப்பட்டார்**

இலங்கையிலுள்ள பாடசாலைகளில் ஒவ்வொரு வருட ஆரம்பத்திலும், தரம் ஒன்றிற்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நிகழ்வு இடம்பெறுகின்றது. கொழும்பின் புறநகர்ப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் தரம் ஒன்றிற்காக மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நிகழ்வில், இரண்டாம் தரத்தில் கற்கும் மாணவி ஒருவர் நெத்மிக்கு மலர்க்கொத்து வழங்கி முதலாம் தரத்திற்கு வரவேற்றார். உண்மையில், நெத்மி மீள இணைத்துக்கொள்ளப்பட்டார் என்றுதான் கூறவேண்டும். நாம் ஏன் அவ்வாறு கூறுகின்றோம்? அதே பாடசாலையில், விசேட கல்விப் பிரிவில் நெத்மி சில வருடங்களாக கல்வி கற்று வருகின்றார். இவர், டவுண் சிண்ட்ரோம் என்றழைக்கப்படும் மனநலிவு நோய்க்குள்ளான ஒரு சிறுமி.

“நெத்மியின் செயன்முறைத் திறன்களில் வளர்ச்சி ஏற்பட்ட பின்னர், முதலாம் தரத்திற்கான பாடத்திட்டத்தை குறிப்பிட்டளவு பின்பற்ற தயாரானதும் அவரை நாம் பாடசாலையின் முதலாம் தரத்திற்கு மாற்றினோம்" என விசேட கல்விப் பிரிவிற்குப் பொறுப்பான ஆசிரியர் எம்மிடம் குறிப்பிட்டார். அதற்கு முன்னராக, முதலாம் தரத்தின் ஆசிரியர் பற்றி நன்கு அறிந்துகொள்ளும்படி செய்தோம். ஏனைய மாணவர்களுடன் நெத்மி பழகவும் கற்றுக்கொள்ளவும் வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்”

"மாணவர்களை சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கை வழமையான முறையில் இடம்பெற்றதால், ஏனைய பிள்ளைகளோ பெற்றோரோ நெத்மியிடம் எந்த

வித்தியாசத்தையும் அவதானிக்கவில்லை. வகுப்பில் எல்லோரும் அவரை ஏற்றுக்கொண்டார்கள்" என நெத்மியின் வகுப்பாசிரியர் குறிப்பிட்டார். "ஏனைய மாணவர்களுடன் இணைந்து அவர் மெதுவாக செயற்பட ஆரம்பித்துவிட்டார். சில செயற்பாடுகள் அவருக்கு கடினமாக இருக்கும். அவருக்காக நான் சில கற்றல் உதவிகளை வடிவமைக்கின்றேன்.

எல்லா பிள்ளைகளும் பாடசாலைக்குச் செல்வதற்கும், அவர்கள் வளர்வதற்கு தேவையான திறன்களைக் கற்றுக்கொள்வதற்கும் மேம்படுத்துவதற்கும் நியாயமான வாய்ப்புகளை வழங்குவதற்கும் உள்ளடங்கல் கல்வி ஒரு சிறந்த வழிமுறையாகும். உள்ளடங்கல் கல்வி என்பது ஒரு கருத்தியல் கட்டமைப்பாகும். அதாவது, குழந்தை சைகை மொழி போன்ற ஒரு குறிப்பிட்ட மொழி மூலம் கற்றுக்கொள்ள விரும்பினால், குழந்தையால் நகரவோ அல்லது ஒரு விசேட பாடசாலைக்கோ செல்ல முடியவில்லை என்றால், பெரும்பாலும் எல்லா குழந்தைகளும் ஒரே பாடசாலையில், ஒரே வகுப்பறையில் அல்லது சில சமயங்களில் வீட்டில் ஒன்றாகப் படிக்கின்றதை இது குறிக்கின்றது.

நெத்மிக்கு அவசியமான நியாயமான கற்றல் வாய்ப்புகள் இந்த பாடசாலையில் வழங்கப்பட்டுள்ளன. நெத்மி மட்டுமன்றி, ஏனைய பல குழந்தைகளுக்கும் இதே வாய்ப்பு கிடைக்கின்றது.

மாணவர்களின் திறன்களை வளர்த்து, உள்ளடங்கல் கல்விக்கு அவரைத் தயார்ப்படுத்தும் நோக்கில், முன்கூட்டியே சிறப்புக் கல்விப் பிரிவுக்கு அழைக்கப்பட்ட சிறப்புக் கல்வித் தேவைகள் கொண்ட ஒரு சிறுவனை நாம் சந்தித்தோம். எதிர்வரும் கல்வியாண்டிற்கான விண்ணப்பங்களை பரிசீலிக்கும் போது அவரை அடையாளம் கண்டதாக ஆசிரியர் குறிப்பிட்டார்.

**சசிந்துவிற்கும் சமாதிக்கும் விசேட கவனம் அவசியமாகும்.**

புற உலக சிந்தனை குறைபாடுடைய நோயான மதியிறுக்கம் (Autism) என்ற நோயினால் பீடிக்கப்பட்ட சிறுவனே சசிந்து. அவரது நடத்தை ரீதியான விசேட தன்மைகள் தொடர்பாக, ஏனைய ஆசிரியர்களுக்கு விசேட கல்வி ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

தனக்கு அருகில் அமர்ந்திருந்த ஒரு சிறுமியை சுட்டிக்காட்டிய சசிந்து, "இது எனது நண்பி" என புன்னகையுடன் குறிப்பிட்டார். "இவர் எனக்கு அடிக்கடி உதவுவார்."

"சசிந்துவிற்கு உதவுவதற்காக சயுமியை நியமித்துள்ளேன்" என பொறுப்பாசியர் குறிப்பிட்டார். சசிந்துவின் கவனம் சில சந்தர்ப்பங்களில் சிதறுகின்றது. அவரைப் போன்ற குழந்தைகளை அடையாளம் கண்டு அவர்களது நிலையறிந்து செயற்படுமாறு பாடசாலை எமக்கு தெரிவித்துள்ளது.”

"சசிந்து என்னோடு இணைந்து செயற்படுகின்றார். அவர் நல்லவர்” என்கிறார் சயுமி.

அறிவுசார் குறைபாடுடைய சிறுமியாக, தரம் மூன்றில் கல்விகற்கும் சமாதி காணப்படுகின்றார்.

“முதலாம் தரத்திலிருந்து ஏனைய மாணவர்களுடன் இணைந்து சமாதி கல்விகற்றார். அவரை கைவிட்டுவிடாமல், குழுவாக இணைந்து அவரை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டுமென எமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. நண்பர்களுடன் சேர்ந்திருக்க அவர் விரும்புகின்றார்” என சமாதியின் வகுப்பாசிரியர் குறிப்பிட்டார். “படித்துக்கொண்டிருக்கும்போது சில நேரங்களில் அவருக்கு அலுப்பு ஏற்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மலசலகூடத்திற்குச் செல்ல அல்லது நீர் அருந்த அனுமதி கேட்கின்றார். கல்வியில் அவரது கவனம் நிலைத்திருப்பதற்கு விசேட கவனம் செலுத்தவேண்டும்”

உள்ளடங்கல் கல்வியை நோக்கியதாக இந்த பாடசாலை காணப்படுகின்றது. சகல மாணவர்களும் ஒன்றாக கற்கவேண்டியதன் அவசியத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் புரிந்துகொள்கின்றனர். அந்தப் புரிதலை ஏற்படுத்த அதிபர், பிரதி அதிபர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள் மற்றும் சகல உத்தியோகத்தர்களும் பங்களிக்கின்றனர்.

பாடசாலையொன்றில் உள்ளடங்கல் கல்வியின் தரத்தை கட்டமைப்பதற்கும் மேம்படுத்துவதற்கும், பச்சாதாபம் எனப்படும் மற்றவர்களின் உளமறிந்து செயற்படும் விடயம் மிக முக்கியமானது. கல்வியில் நியாயமான சந்தர்ப்பங்களை அனைவருக்கும் வழங்கவேண்டுமாயின், விசேட தேவையுடைய குழந்தைகளை கண்டறிந்து அவர்கள் மீது விசேட கவனஞ்செலுத்துவது இன்றியமையாதது.

**ககனவின் சக்கர நாட்காலிக்கான ஒரு வீதி**



ககன தரம் 8இல் கல்வி கற்கின்றார். அவர் சக்கர நாட்காலியின் துணையுடன் பயணிக்கும் ஒரு சிறுவன் ஆவார். அவரது சக்கர நாட்காலிக்கு ஏற்ற வகையிலான ஒரு மேசை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய மேசைகளை விட இது சற்று பெரியது. சக்கர நாட்காலியில் இருந்துகொண்டே வகுப்பறையில் கல்விச் செயற்பாடுகளில் பங்கேற்பதற்கு இது அவருக்கு உதவுகின்றது. “சக்கர நாட்காலியை வகுப்பறையில் வைத்துவிட்டு, நான் முச்சக்கரவண்டியில் வீட்டிற்குச் செல்கின்றேன். வீட்டில் பயன்படுத்துவதற்கு எனக்கு இன்னுமொரு சக்கர நாட்காலி உண்டு” என ககன கூறினார்.

"ககனவின் நண்பர்கள் அவருக்கு உதவுவதை நான் கண்டுள்ளேன்” என ககனவின் வகுப்பில் கற்றுக்கொடுத்துக் கொண்டிருந்த ஆசிரியர் எம்மிடம் குறிப்பிட்டார். “எமது பாடசாலையில் இந்தப் பிள்ளைகளுக்கு எல்லா வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றன. வருடாந்த கல்விச் சுற்றுலாவில்கூட ககன பங்கேற்றார். அவரது தந்தையுடன் இதில் பங்கேற்க அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது.”

ககனவிற்கு சதுர நெருங்கிய நண்பராவார். “நாங்கள் ஆரம்பப் பாடசாலையில் இருந்தே நண்பர்கள் ஆவோம். ககனவை சக்கர நாட்காலியில் நான் நூலகத்திற்கும் தகவல் தொழில்நுட்ப அறைக்கும் அழைத்துச் செல்கின்றேன். அவருக்கு உதவுவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.”

விசேட தேவையுடையவர்களுக்கான வசதி இந்த பாடசாலையில் இல்லை. எனினும், அந்த வசதிகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை பாடசாலை

மேற்கொள்கின்றது. இதனால், இயக்கநிலை குறைபாடுள்ள மாணவர்கள் சக்கர நாட்காலியில் பயணிக்கக்கூடியதாக இருக்கும்.

“இந்த வசதிகளை மேற்கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி போதாமையால், நாம் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியைப் பெற்றோம்” என அதிபர் கூறினார். ககன தற்போது மலசலகூடத்திற்கு மட்டுமன்றி, முற்றம், நூலகம், தகவல் தொழில்நுட்ப அறை ஆகியவற்றிற்கும் சக்கர நாட்காலியில் செல்ல முடியும்.

“இந்தப் பாடசாலையில் கொமட் வசதியுடைய மலசலகூடம் காணப்படுகின்றது. இது என் மகனுக்கு மிகவும் வசதியாக காணப்படுகின்றது” என ககனவின் தாய் எம்மிடம் குறிப்பிட்டார். ககன வெளியில் செல்லவேண்டிய நேரங்களில் அவரது சக்கர நாட்காலியை நண்பர்கள் தள்ளி உதவுகின்றனர். ககனவின் தேவைகளுக்கு உதவும் வகையில் அவரது குடும்பத்தாரின் உதவியை பெற்றுக்கொள்ள தீர்மானித்த பாடசாலை, அவர்களை பாடசாலை வளாகத்தில் தங்கவைக்க அனுமதி வழங்கியது. இதனால், அவரது தாயார் அவருடன் நேரத்தைச் செலவிட முடியும்.

**உள்ளடங்கல் கல்வி**



“பேசும் திறன், இயக்கம் மற்றும் அறிவுசார் குறைபாடுடைய மாணவர்கள் இப்பாடசாலையில் உள்ளதோடு, அவர்கள் விசேட கல்விப் பிரிவிலும் வழமையான வகுப்பறைகளிலும் கல்வி கற்கின்றனர்” என பாடசாலை அதிபர் குறிப்பிட்டார். “அத்தோடு, விசேட தேவையுடைய மாணவர்களை அடையாளம் காண்பதற்கான கட்டமைப்பும் எம்மிடம் உள்ளது. அவர்களுக்கு

அவசியமான வசதிகளை பாடசாலை வழங்குகின்றது. அவர்கள் குறித்து, ஆசிரியர்களுக்கு தெளிவூட்டப்பட்டுள்ளது. அதேபோன்று, ஏனைய மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் இதுபற்றி அறிவிப்பதும் அவசியமாகும். அவர்கள் இதுபற்றி அறிந்திருக்கும்போது, சகல மாணவர்களுக்கு சமமான வாய்ப்புகளை வழங்குவதற்கு இலகுவாக அமையும். இயலாமை காரணமாக எந்தவொரு மாணவரும் கைவிடப்படக் கூடாது என்ற சூழலை நாம் உருவாக்கியிருக்கின்றோம்."

உள்ளடங்கல் கல்வி தொடர்பாக ஆசிரியர்களுக்கும் போதிய அறிவினை வழங்குவது, இந்தப் பாடசாலையின் விசேட அம்சமாகும். உள்ளடங்கல் கல்வி ஒருங்கிணைப்பாளராக ஆசிரிய ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுபற்றி அவர் குறிப்பிட்டதாவது: "ஆரம்பக் கல்வி, அழகியல், விளையாட்டு மற்றும் ஏனைய பாட ஆசிரியர்களுக்கும், உள்ளடங்கல் கல்வி பற்றிய பயிற்சியினை வழங்குவது அவசியமாகும். இது, இயலாமையுடைய மாணவர்களையும் விசேட கல்வித் தேவையினையும் இலகுவாக கண்டறிய உதவுகின்றது. இதனால், அவர்களுக்கு நாம் சமமான சந்தர்ப்பங்களை வழங்க முடியும். "

ஆசிரியர் பயிற்சியின் போது அனைத்து ஆசிரியர்களுக்கும் உள்ளடங்கல் கல்வி பற்றி தெளிவூட்டுவதில் அதிக கவனஞ்செலுத்தப்பட வேண்டுமென அதிபர் சுட்டிக்காட்டினார்.